(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2021 |
| Deposition Of Witness for | : | PW8 |
| Name | : | **Tmt.K.Sindhu** |
| Husband's Name | : | Thiru.Ratha Krishnan |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **07th May 2026.**

(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பப்பட்டு அனுமதிக்கப்பட்டது. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023.**)

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :

1. நான் தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் மாவட்ட வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரிந்து வந்தேன். 04.07.2019 முதல் சிவகங்கை மாவட்டத்தில் ஆயத்துறையில் உதவியாணையராக பணிபுரிந்தேன். 18.08.2020 முதல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளராக

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:41:29 +0530

பணிபுரிந்து வந்தேன்.

2. எனக்கு 07.09.2020–ம் தேதி ஊ.த.க. பிரிவு, சிவகங்கையிலிருந்து இவ்வழக்கு சம்பந்தமாக ஒரு கடிதம் வந்தது. என்னிடம் காண்பிக்கப்படும் கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கடிதம் 14.09.2020–ம் தேதி ஐந்து ஆவணங்களான 1) சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், இலுப்பக்குடி கிராமத்தில் வசித்து வரும் திரு.சுப்பு என்பவர் விண்ணப்பித்த வருமான சான்றின் நகல், 2) வாதி சுப்பு வருமான சான்றிற்காக விண்ணப்பித்த நாள் 06.02.2020 மற்றும் வாதி வருமான சான்றிதழுக்காக பதிவேற்றம் செய்யப்பட்ட ஆவண நகலின் இணைப்புடன், 3) இலுப்பக்குடி கிராமநிர்வாக அலுவலர் கணினி வழியாக வாதி சுப்புவின் வருமான வரி சான்றிற்காக விண்ணப்பத்தினை 06.02.2020–ம் தேதி பெற்று கடந்த 08.02.2020–ம் தேதி, நேரம் 3.26 P.M.,க்கு பரிந்துரை செய்யப்பட்டு பெற்ற ஆவணம், 4) சாக்கோட்டை பிர்கா முன்னாள் வருவாய் ஆய்வாளர் திருமதி.ஜீவா அவர்கள் வாதிக்கு வருமானச்சான்று வழங்க கிராம நிர்வாக அதிகாரியிடமிருந்து பரிந்துரை பெற்ற நாள் 08.02.2020 மற்றும் எதிரி வாதிக்கு வருமான சான்று வழங்க பரிந்துரை செய்து சாக்கோட்டை

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:41:35 +0530

மண்டல துணை வட்டாட்சியர் அவர்களுக்கு கடந்த 13.02.2020ம் தேதி, நேரம் பிற்பகல் 2.00 P.M.,க்கு அனுப்பிய பரிந்துரை, **5)** சாக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியர் வாதிக்கு வருமான சான்று வழங்க சாக்கோட்டை பிர்கா வருவாய் ஆய்வாளர் அதிகாரியிடமிருந்து கடந்த 13.02.2020–ம் தேதி, நேரம் பிற்பகல் 2.00 P.M.,க்கு பரிந்துரை பெற்றதும் மற்றும் சாக்கோட்டை மண்டல துணை வட்டாட்சியர் வாதிக்கு 13.02.2020–ம் தேதி, நேரம் பிற்பகல் 2.05 P.M.,க்கு வருமான சான்று வழங்கியது குறித்தும் கடிதம் அனுப்பியிருந்தேன். வாதிக்கு வழங்கப்பட்டுள்ள வருமான சான்றிதழில் கடந்த 13.02.2020–ம் தேதி என்றும், நேரம் 14.06.11 IST என குறிப்பிட்டு வழங்கப்பட்டுள்ளது. நான் காவல் ஆய்வாளர், ஊ.த.க பிரிவு, சிவகங்கை அவர்களுக்கு14.02.2020ம் தேதி முகவுரை கடிதத்தில் சொல்லப்பட்ட அனைத்து ஆவணங்களும் ஒரே கோப்பாகத்தான் இணைத்து அனுப்பினேன். அந்த ஆவணங்கள் என்னிடம் காண்பிக்கப்படுதான். அந்த **ஆவணங்கள் உள்ளடங்கிய கோப்பு அ.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கு தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

ANITHACHRISTY J
Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:41:41 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>** வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

“Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct”

ANITHACHRISTY J

Digitally signed by ANITHACHRISTY J
Date: 2026.05.07 17:41:46 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.